**Judicial Form No.**53
(See Rule 42)
**DEPOSITION OF WITNESSES**
(**Chapter XXII**, **Cr**.**P**.**C**.)
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE**, **SULUR**.

Calendars
Miscellaneous
Preliminary Register
Sessions

Case No. CC 902 of 2025

Depositions of PW - 2 witness for ________ Prosecution / Defence / Court

Name : திரு. வடிவேல்குமார், காவல் ஆய்வாளர்

Father's Name :

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 11th **day of March** 2026.

**(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். போலீசார் சாட்சிகளை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினார்கள்)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

1. நான் தற்பொழுது கருமத்தம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். ஆவணங்களின் அடிப்படையில் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 04.11.2024 ம் தேதி 16.00 மணிக்கு கருமத்தம்பட்டி காவல் நிலைய தலைமை காவலர் திரு. மணிகண்டன் அவர்கள் நிலைய அலுவலில் இருந்தபோது பவுன்ராஜ் என்பவரின் மகன் காசிராஜன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரினை பெற்று வழக்கின் தன்மைப்படி கருமத்தம்பட்டி காவல் நிலைய குற்ற எண்.504/2024 சட்டப்பிரிவு 296(b), 118(1), 351(3) பாநீசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். புகார் **அ.சா.ஆ.**2 மற்றும் முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.**3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அசல் முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் மனுவினை இணைத்து நீதித்துறை நடுவர் சூலூர் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார்.

2. அதன்பின்னர் வழக்கு கோப்பினை புலன்விசாரணைக்கு எடுத்துக்கொண்ட உதவி ஆய்வாளர் திரு.ராதாகிருஷ்ணன் அவர்கள் அன்றைய தினமே 17.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் ரமேஷ் மற்றும் வினோத்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். பார்வைமகசர் **அ.சா.ஆ.4** மற்றும் மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3. சாட்சிகள் காசிராஜன், காளிமுத்து, சித்தராஜா, சுந்தர்ராஜன், ரமேஷ், வினோத்குமார் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். அதன்பின்னர் இவ்வழக்கின் எதிரி மாண்புமிகு மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டார். அதன்பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட காசிராஜன் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.ராமசந்திரன் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு மற்றும் காயசான்றிதழ் பெற்றுள்ளார். விபத்து பதிவேடு **அ.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காயசான்றிதழ் **அ.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்னர் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து 04.12.2024 ம் தேதியன்று சட்டப்பிரிவுகள் 296(b), 118(1), 351(3) பாநீசவின் படி குற்றம் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல் விசாரணையில் சொன்ன நேரம் மற்றும் சொன்ன விதத்தில் புகார் பெறப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி காயம் இவ்வழக்கின் எதிரியால் ஏற்படுத்தப்படவில்லை என்றால் சரியல்ல. அசா.1 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரிக்கு எதிராக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. அசா.1 முதல் விசாரணை சாட்சியத்தில் எதிரிக்கு எதிராக எந்த சாட்சியமும் அளிக்கவில்லை ஆகவே இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. புலன்விசாரணை அதிகாரி சரிவரப் புலன் விசாரணை மேற்கொள்ளாமல் எதிரி மீது தவறுதலான குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

ARUNKUMAR T

Digitally signed by ARUNKUMAR T
Date: 2026.03.11 20:06:15 +0530

**<u>மறுவிசாரணை</u>** இல்லை

**Signature of Witness**

**நீதித்துறை நடுவர்**

**சூலூர்**